www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

வகுப்பு : 10

தேர்வு எண் | 1 | 0 | 1 | 1 | | |

# இரண்டாம் திருப்புதல் தேர்வு, பிப்ரவரி-2023

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

குறிப்புகள் : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத்தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதவும். 15X1=15

1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சிப்புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
2. 'பெரியமீசை' சிரித்தார் – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை ———
   அ) வேற்றுமைத் தொகை ஆ) அன்மொழித்தொகை இ) உவமைத்தொகை ஈ) பண்புத்தொகை
3. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ———
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
5. 'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை' – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்
6. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
7. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்று பாராட்டப்படுவோர்
   அ) உதியன் சேரலாதன் ஆ) அதியன் பெருஞ்சாத்தன்
   இ) பேகன் கிள்ளி வளவன் ஈ) நெடுஞ்செழியன் திருமுடிக்காரி
8. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி ———
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
9. தடக்கை – இலக்கணக்குறிப்பு தருக.
   அ) பண்புத்தொகை ஆ) பெயரெச்சம் இ) உரிச்சொல் தொடர் ஈ) உவமைத்தொகை
10. தமர் – பொருள் தருக.
   அ) பேர் ஆ) பகைவர் இ) சான்றோர் ஈ) உறவினர்
11. போதவிழ் – பிரித்து எழுதுக.
   அ) போது + அவிழ் ஆ) போ + தவிழ் இ) போது + விழ் ஈ) போது + இவிழ்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடைதருக.

*"முதல்மழை விழுந்ததும் மேல்மண் பதமாகிவிட்டது*
*வெள்ளி முளைத்திடுது, விரைந்து போ நண்பா!*
*காளைகளை ஓட்டிக் கடுகிச் செல், முன்பு!*
*பொன்னேர் தொழுது, புலன் வழிபட்டு*
*மாட்டைப் பூட்டி காட்டைக் கீறுவோம்"*



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) கம்பர் ஆ) கு. ப. ராஜகோபாலன் இ) கண்ணதாசன் ஈ) அதிவீரராம பாண்டியர்

13. இப்பாடல் இடம்பெறும் நூல்?

அ) காசிக்காண்டம் ஆ) கொய்யாக்கனி இ) ஏர் புதிதா? ஈ) கம்பராமாயணம்

14. விளிச்சொல்லை எழுதுக.

அ) விழுந்ததும் ஆ) தொழுது இ) நண்பர் ஈ) கடுகிச்சென்

15. "கடுகி" – பொருள் காண்க.

அ) மெதுவாக ஆ) விரைந்து இ) தாமதமாக ஈ) சோர்ந்து

பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4X2=8

16. விடைக்கேற்ற வினாவினை அமைக்க.

அ) இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காக போராடியவர் மார்ஷல் ஏ. நேசமணி ஆவார்.

ஆ) இளங்கோவடிகள் சேர மரபைச் சார்ந்தவர்.

17. நமக்கு உயிர் காற்று

காற்றுக்கு வரம் மரம்

மரங்களை வெட்டி எறியாமல்

நட்டு வளர்ப்போம் – இத்தொடர்களைப் போலவே உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்கள் எழுதுக.

18. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19. மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெரும் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

20. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்" – இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

21. 'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5X2=10

22. 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்

வடுக்காண் வற்றாகும் கீழ்' – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

23. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

24. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்

25. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

அ) தாமரை இலை நீர்போல ஆ) கண்ணினைக் காக்கும் இமைபோல

26. அகராதி கூறும் பொருளை எழுதுக.

அ) செறு, ஆ) களரி (அல்லது)

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா:

சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக. (தேன், மழை)



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

27. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. (விடு, வீடு)

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' – இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. ஒயிலாட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கமாக எழுதுக.

31. தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) போரிலும் அறநெறிகளைப் பின்பற்றியவர் யார்?

ஆ) போர் அறம் என்பது யாது?

இ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2X3=6

32. முல்லை நிலத்தில் இருந்தும் மருத நிலத்தில் இருந்தும் கிடைக்கும் உணவு பொருள்கள் யாவை?

33. "செங்கதிர்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

34. அ) 'விருந்தினராக' எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) "வெய்யோனொளி" – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2X3=6

35. ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம் தருக.

36. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38. அ) ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

(அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

40. காட்சியைக் கண்டு கவிதை எழுதுக.



41. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) தமிழகப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் தேவைப் படுவன நீங்கள் செய்ய விரும்புவதை வரிசைப்படுத்தி எழுதுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

i) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. Nelson Mandela

ii) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. Rita Mae Brown.

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்தனர். அப்போது, ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சமயத்தில் வடக்கெல்லைத் தமிழ் மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொண்டு செயல்பட்ட தமிழரசுக் கழகத்தினர் தமிழர்கள் அதிகம் வாழும் சென்னையிலும், திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது. சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களில் வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்கியது.

அ) இந்திய மாநிலங்கள் எப்பொழுது பிரிக்கப்பட்டது?

ஆ) சித்தூர் மாவட்டத்தை எதனுடன் இணைக்க விரும்பினர்?

இ) வடக்கெல்லைப் போராட்டம் தொடங்கிய இடங்கள்?

ஈ) வடக்கெல்லை தமிழ் மக்களை ஒருங்கிணைத்தது யார்?

உ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3X8=24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) சிற்றகல் ஒளி ம. பொ. சிவஞானம் அவர்கள் மேற்கொண்ட பல்வேறு போராட்டங்கள் குறித்து விரிவாக எழுதுக.

44. அ) "பாய்ச்சல்" கதையினைக் கருப்பொருள் சிதையாமல் எழுதுக.

(அல்லது)

ஆ) உரைநடையிலும் அணிகலன் உண்டு என்பதை எழில்முதல்வனின் கூற்றில் நின்று விளக்குக.

45. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக.

அ) முன்னுரை – சான்றோர் வளர்த்த தமிழ் – பிள்ளைத்தமிழ் – சதகம் – பரணி – கலம்பகம் – உலா – அந்தாதி – கோவை – முடிவுரை (அல்லது)

ஆ) முன்னுரை – உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் – உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் – சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com